**ஜூன் – 21**

**"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்."   - மத் 11 : 29.**

உண்மையாகவே சாந்தமான அமைதியான ஆவியில் இளைப்பாறுதலின் இரகசியம் இருக்கிறது. சாந்தமுள்ளவர்களாய் இருக்கப் பொறுமையின் குணசீலத்தையும், தேவனுடைய சித்தத்திற்கு அன்புள்ள கீழ்ப்படிதலின் குணசீலத்தையும், அவருடைய அன்பிலும், கவனிப்பிலும், நடத்தும் ஆலோசனையிலுமுள்ள ஞானத்திலும், மேல் விசாரணை செய்து நடத்துகிற, பராமரிப்பின் ஞானத்திலும், நீடித்த நம்பிக்கை வைக்கிற குணசீலத்தை அப்பியாசிக்கவும், துர்கீர்த்தியிலும், நற்கீர்த்தியிலும் அல்லது அனுகூலமான அல்லது பிரதிகூலமான சந்தர்ப்பங்களிலும், இந்தப் போக்கை உறுதியாக அனுசரிக்க வேண்டும். தேவனுடைய பிரியமான பிள்ளைகள் அவர் செய்தது போல, தேவனுடைய பராமரிப்புக்களை ஏற்றுக்கொண்டும், அவருடைய கட்டளைகளுக்கும், நடத்துதலுக்கும் கீழ்ப்படிந்துகொண்டு, அவருடைய நுகத்தைத் தங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, அவரிடத்திலும் கற்றுக் கொள்ளுகிறவர்களுக்கு, அவர் ஒருவரே கொடுக்கக்கூடியதும், கண்டிப்பாகக் கொடுக்கிறதுமான பெலத்தைத் தரித்துக் கொண்டு, கிறிஸ்துவினுடைய சாந்தமான அமைதியான ஆவியைக் காப்பி அடிக்க அதிகதிகமாக நாடுவார்களாக.

**- Z ’96, 79 (R 1961).**

நமது கர்த்தர், தான் சாந்தமுள்ளவராயிருக்கிறேன் என்று சொன்னபொழுது, இருதயத்திலும், மனதிலும் அவர் தாழ்மையுள்ளவராயிருந்ததைக் குறிப்பிட்டார். ஆகையால் அவர் போதிக்கப்படக் கூடியவராகவும், வழிப்படுத்தப்படக் கூடியவராகவும் இருந்தார். அவர் மனத்தாழ்மையாயிருக்கிறேன் என்று சொன்னபொழுது, தன்னைப்பற்றி சரியான சுயமதிப்பை உடையவராயிருந்தார் என்பதைக் குறித்தார். இந்த இரண்டு குணங்களையும் நாமும் காப்பி அடிக்க, அவர் நமக்கு சிபாரிசு செய்கிறார். இவைகள் அவருடைய குணத்தை அலங்கரித்ததானால், இயற்கையாகவே பெலவீனர்களாகவும், பாதை தவறியுமிருக்கிற நமக்கு அவைகள் எவ்வளவு அதிகமாக பொருத்தமானவைகளாக இருக்கின்றன..! அவரிடமிருந்து இந்தக் குணசீலங்களை நாம் கற்றுக் கொள்ளக்கூடும். **-P ’34, 95.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 7:29; 22:16; 23:8; யோவா 3:2; 13:15; சக 9:9; ஏசா 50:5,6; 53:7; மத் 26:49-53; 2கொரி 10:1; மத் 9:10; லூக் 22:27; அப் 8:32,33; பிலி 2:5-8.

**கோபுர வாசிப்பு : Z ’96, 78 (R 1961)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் கிறிஸ்துவினிடமிருந்து சாந்தத்தையும், தாழ்மையையும் கற்றுக்கொண்டேனா? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில்? பலன்கள் என்ன?